# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில் 18.01.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா ஆலி இம்ரான் (36,105), சூரா தவ்பா (122) மற்றும் சூரா அஸ்ஸாஃப்பாத் (103) ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

**இந்த வசனங்களின் பொருள்:** *இம்ரானுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண் என் இறைவா! என் வயிற்றில் உள்ளதை உனக்காக (உன் பணிக்காக) அர்ப்பணிக்க நான் நேர்ந்துள்ளேன். எனவே என்னிடமிருந்து இதனை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவாய் என்று கூறிய நேரத்தை நினைத்துப் பார்ப்பீராக (3:36)*

*அவன் அவருடன் வேகமாக நடந்து செல்வதற்குரிய வயதை அடைந்த போது, என் அருமை மகனே! நான் உன்னை அறுப்பதை(ப் போன்று) ஒரு கனவில் கண்டேன். எனவே (அதனைப் பற்றி) உன் கருத்து என்னவென்பதை நீ முடிவு செய்; என்று அவர் கூறினார். (அதற்கு) என் தந்தையே! உமக்குக் கட்டளையிடப்பட்டவாறு நீர் செய்வீராக! அல்லாஹ் நாடினால், நீர் என்னை (எனது நம்பிக்கையில்) நிலைத்திருப்பவனாகவே காண்பீர் என்று அவர் கூறினார். (37:108)*

*(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)*

*நம்பிக்கை கொண்டவர்கள் எல்லாரும் (ஒன்றுதிரண்டு) புறப்படுவது அவர்களால் முடியாததாகும். அவர்களின் ஜமாஅத்திலிருந்து ஒரு சாரார், மார்க்கத்தை முழுமையாகக் கற்கவும் அவர்களிடம் திரும்பி வந்து (மார்க்கத்தைச் சரிவர பேணாமல் இருப்பது குறித்து) அவர்களை எச்சரிக்கை செய்வதற்கும் அவர்கள் ஏன் புறப்பட்டிருக்கக் கூடாது. (9:122)*

இவை சூரா ஆலி இம்ரான், சூரா தவ்பா மற்றும் சூரத்துஸ்ஸாஃபாத் ஆகிய சூராக்களின் வசனங்களாகும். இவற்றில், தாயின் விருப்பம், பெற்றோர், பிள்ளைகளுக்கு வழங்கும் சரியான தர்பிய்யத், பிள்ளைகளின் தியாக மனப்பான்மையை வளர்ப்பது மற்றும் அதற்காக ஆயத்தப்படுத்துவது, வாழ்க்கையை அர்ப்பணிப்பதற்கான முக்கியத்துவம் மற்றும் பணி இவ்வனைத்தையும் செய்வதற்கான குறிக்கோள் யாது? ஆகியவை இவ்வசனங்களில் கூறப்பட்டுள்ளன.

முதல் வசனம் சூரா ஆலி இம்ரானின் 36வது வசனமாகும். இதில் ஒரு தாய் தனது குழந்தையை மார்க்கத்திற்காக அர்ப்பணிக்கும் விருப்பத்தை தெரிவித்தது கூறப்பட்டள்ளது. அல்லாஹ் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இதில் துஆவும் உள்ளது.

பிறகு சூரத்துஸ் ஸாஃப்பாத்தின் 103வது வசனத்தை ஓதினேன். இதில் ஒரு தந்தை தன் மகனை இறைவனுக்காக தியாகம் செய்வதற்காக மகனுக்கு கொடுத்த தர்பிய்யத் மற்றும் மகன் இறைவனுக்காக எல்லா வகையான தியாகமும் செய்ய ஆயத்தமான கருத்தும் இதில் இருக்கிறது. தந்தை கொடுத்த தர்பிய்யத்தானது மகனை இறைவனின் விருப்பத்துடன் இணைத்து விட்டது. மகன் தந்தையிடம் என் தந்தையே! எல்லா வகையான தியாகம் செய்வதிலும் நீர் என்னை ஆயத்தமான நிலையிலேயே காண்பீர். அது மட்டுமல்லாமல், பொறுமை மற்றும் உறுதிப்பாட்டில் உயர் தரமான முன்னுதாரணத்தை நிலைநாட்டுபவனாகவே காண்பீர் என்று கூறினார்.

பிறகு சூரா ஆலி இம்ரானின் 105வது வசனத்தை நான் ஓதினேன். அதில் நன்மையைப் பரப்புவதும், பரப்புபவர்களும் மற்றும் தீமையிலிருந்து தடுப்பவர்களுமாகிய கூட்டத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் இவைதான் அல்லாஹ்வின் விருப்பத்தை பெறுவதற்கான வழியாக அமைந்து ஒருவரை வெற்றி பெறச் செய்கிறது.

இறுதியில் நான் சூரா தவ்பாவின் 122 வது வசனத்தை ஓதினேன். அதில் நன்மை – தீமையைப் பிரித்தறிவதற்காக மார்க்க அறிவைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். மார்க்க அறிவு என்பது என்ன? அது இஸ்லாமிய சரீஅத் ஆகும். அது திருக்குர்ஆன் ஆகும். இறைவன் உங்களுக்காக மார்க்கம் என்ற அடிப்படையில் இஸ்லாத்தை நான் விரும்பியுள்ளேன் என்று கூறுகிறான். இதனால் நீங்கள் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுபவர்களாக வேண்டும்.

ஆக, இந்தக் கருத்தின் உரிமையை நிறைவேற்றுவதற்காகவே இக்காலக்கட்டத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தோற்றுவித்தான். இந்த ஜமாஅத்தில் தான் தாய்மார்கள் தமது குழந்தைகளை பிறப்பதற்கு முன்பே, என் இறைவா! என் வயிற்றில் உள்ளத்தை உலக ஆசாபாசங்களை விட்டு விலக்கியவாறு உனக்கு அர்ப்பணிக்கிறேன். நீ இந்த ஏற்றுக் கொள்வாயாக என்று துஆ செய்தவாறு உணர்ச்சியுடனும், உத்வேகத்துடனும் இருக்கிறார்கள் என்பதை காண முடிகிறது. இன்று நீங்கள் சற்று பார்வையிடுங்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த தாய்மார்களைத் தவிர வேறு யாரும் குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே அக்குழந்தைகளை இறைவனின் வழியில் தியாகம் செய்வதற்காக துஆ செய்வதில்லை. இந்த உணர்வைக் கொண்ட தாய் இன்று அஹ்மதி தாய்மார்களைத் தவிர வேறு எந்தத் தாயும் இல்லை.

பாகிஸ்தானைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, இந்தியாவைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி அல்லது ஆசியாவின் ஏதாவதொரு நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, ஐரோப்பாவைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அமெரிக்காவைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, ஆஸ்திரேலியாவில் வசிப்பவராக இருந்தாலும் சரி அல்லது பிற தீவு நாடுகளைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி ஒரு முக்கியமான குறிக்கோளுக்காக காலத்தின் கலீஃபாவிடம் அர்ப்பணித்து அதன் பிறகு அல்லாஹ்விடம் எங்கள் இறைவா! எங்களுடைய இந்த தியாகத்தை ஏற்றுக் கொள்வாயாக என்று அஹ்மதி தாய்மார்கள் துஆ செய்கின்றனர். இவ்வாறு துஆ செய்பவர் உலகில் அஹ்மதி பெண்கள் தான் தென்படுகின்றனர்.

காலத்தின் கலீஃபா எங்களுடைய விண்ணப்பத்தை நிராகரித்து விடக் கூடாதே! என்ற கவலை அவர்களுக்கு இருக்கிறது. இந்த நிலை வேறு எங்கும் உருவாகவே முடியாது. இந்த உணர்வு வேறு எங்கும் உருவாக முடியாது. ஏனென்றால் கிலாஃபத்தின் நிழலின் கீழ் வாழ்கின்ற ஒரே ஜமாஅத் இதுவாகும். இந்த ஜமாஅத்தை இறைவன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் மூலமாக உருவாக்கியுள்ளான். இதோடு முடிந்து விடவில்லை. ஜமாஅத்தே அஹ்மதிய்யாவில் மட்டும் தான் தந்தையர்கள் தமது குழந்தைகளுக்கு சிறந்த தர்பிய்யத் கொடுக்கின்றனர். அதன் விளைவாக அந்தக் குழந்தை வாலிபப் பருவத்தை அடையும் போது எல்லா வித தியாகங்களுக்காகவும் தயாராகி விடுகின்றான். இதன்படி அந்தக் குழந்தை முதல் உடன்படிக்கை எனது பெற்றோர்களின் உடன்படிக்கையாகும். இரண்டாவது உடன்படிக்கை என்னுடையதாகும் என்று காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதுகிறது. நீங்கள் தியாகம் செய்வதற்காக என்னை எங்கு வேண்டுமானாலும் அனுப்புங்கள். எப்போதும் என்னை பொறுமையாளனாகவும் உறுதிப்பாடு மிக்கவனாகவுமே காண்பீர்கள். மேலும் எங்களது தாய் தந்தையர்கள் செய்த உடன்படிக்கையிலிருந்து பின்வாங்க மாட்டோம் என்று கூறுகின்றனர்.

இந்தக் குழந்தைகளே முஹம்மதிய உம்மத்தின் விசுவாசம் உள்ளவர்கள் என்று அழைக்கப்படுபவர்களாவர். இவர்களே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவர்கள் என்ற உரிமையைச் செலுத்துபவர்களாவர். பெற்றோரின் தர்பிய்யத் மற்றும் அக்குழந்தையின் நல்ல இயல்பு

ஆகியவை அல்லாஹ்வுக்கு ஆற்ற வேணடிய கடமைகளைச் செய்வது மற்றும் இறை அடியார்களின் உரிமையைச் செலுத்துவதற்கான உயர் தரத்தைக் கற்றுக் கொடுக்கும். அவர்களுக்கு மார்க்கத்தைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கான ஆர்வமும் எழுந்துள்ளது. அவற்றை தமது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதன் பக்கமும் கவனம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் இஸ்லாத்தைப் பரப்புவது மற்றும் மனித குலத்திற்கு தொண்டாற்றுவதற்கான எழுச்சியும் உணர்வும் பிறந்துள்ளது.

உயிருள்ள சமுதாயங்கள் மற்றும் முன்னேறுகின்ற ஜமாஅத்துகள் இந்த உணர்வு, இந்த சிந்தனை மற்றும் இந்த உடன்படிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான வாக்குறுதி ஆகியவற்றை ஒருபோதும் கைவிடுவதில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த உணர்வுகளை பசுமையாக வைத்திருக்க எப்போதும் இந்த அம்சங்களை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும். எங்காவது சோம்பேறித்தனம் உருவாகினால் அவற்றைப் போக்குவதற்காக செயல்முறைத் திட்டங்களை உருவாக்குகிறது. இறைவனின் கட்டளையை அவ்வப்போது நினைவூட்டிக் கொண்டிருப்பதே கிலாஃபத்தின் பணியாகும். காரணம் ஜமாஅத் முன்னேற்றத்தின் வேகம் ஒருபோதும் குறையக் கூடாது. அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகில் பரப்புவதற்காக ஒன்றன்பின் ஒன்றாக குழு தயாராகிக் கொண்டே செல்ல வேண்டும். தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் ஆறுகள் நிலத்தைப் பசுமையாக வைத்திருப்பதைப் போன்று ஒன்றன்பின் ஒன்றாக மார்க்கத் தொண்டு செய்பவர்களின் கூட்டம் ஆன்மீக பசுமைக்கு காரணமாக அமையும். வயல்களில் Tube well அல்லது ஆறுகள் மூலமாக பாசனம் செய்யப்படும் இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு நன்றாக தெரியும். அதாவது, ஒரு வயலுக்கு முழுமையாக நீர் பாய்ச்சி முடிப்பதற்குள் தண்ணீர் நின்று விட்டால், பிறகு மறுபடியும் முதலிலிருந்து முழு வயலுக்கும் தண்ணீர் பாய்ச்ச வேண்டியது வரும். இதனால் நேசம் வீணாவதுடன் தண்ணீரும் வீணாகிறது. இதுபோன்றே சீர்திருத்தம் மற்றும் (கொள்கையைப்) பரப்பும் பணிகளுக்காக தொடர்ச்சியான முயற்சி இல்லை எனில் அல்லது தொடர்ச்சியாக முயற்சி செய்பவர்கள் இல்லை என்றால், விட்டு விட்டு தண்ணீர் பாய்ச்சினால், தூதுச் செய்தி விட்டு விட்டு சென்று சேர்ந்தால், விட்டு விட்டு முயற்சி செய்தால் அது முழுமை பெறுவதை தாமதப்படுத்தி விடுகிறது. இதனால் தர்பிய்யத் மற்றும் தப்லீகின் பணிகளில் தடைகள் ஏற்படுகின்றன. எனவே அல்லாஹ் கூறுகிறான். ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் ஒரு கூட்டம் எல்லா நேரமும் தயாராக இருக்க வேண்டும். இது இறைவனின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்க்கும் வேகத்தை குறைய விடாமல் வைத்திருக்க வேண்டும்.

எனவே நான் மீண்டும் இந்த விசயத்தை நினைவூட்டுகிறேன். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் வக்ஃபே நவ் திட்டத்தை தொடங்கினார்கள். மார்க்கத்திற்கு தொண்டு செய்வதற்காக எந்நேரமும் ஒரு கூட்டம் தயாராக இருக்கும் என்ற எண்ணத்தோடும் துஆவோடும் இதை ஆரம்பித்தார்கள். இந்த நீரோட்டம் ஒருபோதும் தடை படாது. ஜமாஅத்தின் நூல்களை மொழிபெயர்ப்பவர்களும் எப்போதும் ஜமாஅத்தில் இருப்பர். தப்லீக் மற்றும் தர்பிய்யத்தில் பணிகளை மேற்கொள்பவர்களும் பெரும் எண்ணிக்கையில் இருப்பர். மேலும் ஜமாஅத் அமைப்பை நடத்தும் பிற துறைகளுக்கும் வாக்கிஃபீன்களின் கூட்டம் எப்போதும் இருந்து வருவர். ஆகவே இதை எப்போதும் நமது கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அர்ப்பணித்த பிறகு தமது கடமைகளிலிருந்து விலகிவிடக் கூடாது. குழந்தைகளை வக்ஃப் செய்வதற்கான உணர்வு உருவாவது சந்தேகமின்றி போற்றத்தக்க ஒன்றாகும். ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான குழந்தைகளை வக்ஃபே நவ் திட்டத்தில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் வருகின்றன. ஆனால் இந்த விண்ணப்பங்களைக் கொடுத்த பிறகு தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரின் பொறுப்பும் அதிகமாகி விடுகிறது.

உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுகின்ற இந்த முக்கிய குறிக்கோளுக்காக குழந்தைகளை தயார் செய்வதற்காக முதலில் பெற்றோர்கள் முயற்சி செய்ய வேண்டும். குழந்தைகளுக்கு தமது நேரத்தை ஒதுக்கி, உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்டி முதலில் அவர்களை இறைவனுடன் தொடர்புடையவர்களாக ஆக்க வேண்டும். குழந்தைகளுக்கு ஜமாஅத் அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் இதற்காக எல்லா தியாகமும்

செய்யத் தயாராவதற்கு குழந்தைப் பருவத்திலிருந்தே இவ்வகையில் தர்பிய்யத் செய்ய வேண்டும். இதை தவிர வேறு எந்த சிந்தனையும் அவர்களுக்கு ஏற்படவே கூடாது.

விபரம் தெரியும் பருவத்தை அடைந்த பின் குழந்தைகள் வக்ஃபே நவ் அல்லது ஜமாஅத்தின் நிகழ்ச்சியில் பங்கெடுக்கும் போது அவர்கள் மார்க்கத்திற்காக மட்டுமே தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்ற சிந்தனை மட்டுமே அவர்களது மனங்களில் ஆழமாக பதிந்திருக்க வேண்டும். உங்களது வாழ்க்கையின் குறிக்கோள் மார்க்கக் கல்வியை பயில்வதாகும் என்பதை அதிகமாக குழந்தைகளின் மனதில் பதிய வைக்க வேண்டும். மார்க்கக் கல்வியைப் பயில்வதற்கு ஜமாஅத்தின் கல்வி துறையில் சேர்வது அவசியமாகும்.

ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்பவர்களில் வக்ஃபே நவ் குழந்தைகளின் எண்ணிக்கை என்னிடம் இருக்கின்ற புள்ளி விபரத்தின் அடிப்படையில் பாகிஸ்தானைத் தவிர முழு உலகிலும் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும். பாகிஸ்தானில் அல்லாஹ்வின் அருளால் 1033 வக்ஃபே நவ் -ஐச் சேர்ந்தவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் பயின்று வருகின்றனர். இந்தியாவிலிருந்து எனக்கு கிடைத்துள்ள தகவலின்படி 93 பேர் என்று வந்துள்ளது. இதில் வக்ஃபே நவ் பிரிவுக்கு தவறு ஏற்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். இதை விட அதிகமாக இருக்க வேண்டும். இதில் தவறு இருந்தால் இந்தியாவின் வக்ஃபே நவ் பிரிவு இப்போது இந்தியாவில் வக்ஃபே நவ் -ஐச் சேர்ந்த எத்தனை மாணவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் பயில்கின்றனர் என்று தகவல் தரவும்.

ஜெர்மனியில் 70 பேர் என்று அறிக்கை வந்துள்ளது. இது கடந்த வருடத்தின் அறிக்கையாகும். இப்போது இங்கு 80க்கும் அதிகமாகி விட்டது. இதில் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த குழந்தைகளும் உள்ளனர். ஜெர்மனியைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல. கனடாவின் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் 55 பேர் உள்ளனர். இதில் கொஞ்சம் எண்ணிக்கை இப்போது அதிகமாகி இருக்கலாம். இதில் அமெரிக்காவைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். U.K.-வின் ஜாமிஆவில் கடந்த ஆண்டு அறிக்கையின்படி 120 பேர் இருந்தனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இப்போது இதில் 10-15 பேர் அதிகமாகி இருக்கலாம். இங்கும் ஐரோப்பாவின் பிற நாடுகளிலிருந்தும் குழந்தைகள் வருகின்றனர். கானாவில் 12 பேர். சாஹித் பட்டம் படிப்பதற்காக புதிதாக தொடங்கப்பட்டுள்ள ஜாமிஆவில் உள்ள எண்ணிக்கை தான் இந்த 12 பேர். பங்களாதேசில் 23 பேர். இவ்வாறு வக்ஃபே நவ் அலுவலகத்திற்கு தெரிந்த வரை மொத்த எண்ணிக்கை 1400 ஆகும். ஆனால் முழு உலகிலும் உள்ள வக்ஃபே நவ் ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 28,000 -த்தை நெருங்கி விட்டது.

நம் முன்னால் முழு உலகின் செயற்களமும் உள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் தீவு நாடுகள் ஆகிய எல்லா இடங்களுக்கும் நாம் சென்று சேர வேண்டும். நாம் எல்லா கண்டங்களில் மட்டுமல்ல; எல்லா நாடுகளில் மட்டுமல்ல; எல்லா நகரங்களில் மட்டுமல்ல; எல்லா ஊர்களுக்கும் செல்ல வேண்டும். உலகத்தின் ஒவ்வொரு நபர் வரைக்கும் இஸ்லாத்தின் அழகிய போதனையைக் கொண்டு சேர்க்க வேண்டும். இதற்காக ஒரு சில முபல்லிக்குகள் பணியை முழுமையாக செய்து விட முடியாது.

குழந்தைகளுக்கு அவர்களின் குழந்தைப் பருவத்தில் தாம் வக்ஃபே நவ் -ல் இருப்பதற்கான மகிழ்ச்சி வெளிப்படுகிறது. ஆனால் இந்த ஐரோப்பிய சமூக, சூழ்நிலையில் பெற்றோர்கள் சரியாக கவனம் செலுத்தாதன் காரணமாக, உலகியல் கல்வியினால் அதிகம் பாதிப்பிற்கு ஆளான காரணத்தால் அல்லது தமது நண்பர்களின் கூட்டங்களில் அமர்வதன் காரணமாக ஜாமிஆவில் சேர்ந்து படிப்பதற்குப் பதிலாக பிற பாடங்களைப் படிப்பதன் பக்கம் கவனம் அதிகமாக இருக்கிறது. சிலர் குழந்தைப் பருவத்தில் இருக்கும் போது ஜாமிஆ செல்வேன் என்று கூறுகின்றனர். ஆனால் செகன்டரி ஸ்கூல் தேர்ச்சி பெற்றதும் அவர்களின் முன்னுரிமைகள் மாறி விடுகின்றன. சில குழந்தைகள் மிகவும் புத்திக்கூர்மை கொண்டவர்களாக உள்ளனர். குழந்தைப் பருவத்தில் இருந்தே அவர்கள் அறியப்படுவார்கள். அவர்களுக்கு சில பாடங்களில் அசாதாரணமான ஆர்வம் இருக்கும். உதாரணமாக அறிவியல் பாடங்களில் அதிக ஆர்வம் இருக்கும். அதில் அவர்களது மூளை நன்றாக வேலை செய்யும். அவர்களை கண்டிப்பாக அந்த பாடங்களைப் படிக்க சேர்த்து விட வேண்டும். ஆனால் பெரும்பாலான

குழந்தைகள் கூட்டத்தோடு கூட்டாக செகன்டரி ஸ்கூல் முடித்த பிறகு தமது பாடங்களைத் தேர்வு செய்கின்றனர். பெரும்பாலான குழந்தைகள் என்னை சந்திக்கின்றனர். அப்போது நான் அவர்களிடம் கேட்கிறேன். அவர்கள் 10 ஆம் வகுப்பில், அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இது கிரேடு என்று அழைக்கப்படுகிறது. 10வது அல்லது GLSC வரை அவர்களது மூளையில் எதுவும் இருப்பதில்லை. அடுத்து நாம் என்ன பாடம் எடுக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

எனவே பெற்றோர்களின் தர்பிய்யத் இந்த வகையில் இருக்க வேண்டும். அதாவது தொடக்கத்தில் அவர்களது மனதில், நான் ஒரு வக்ஃபே நவ் சிறுவன் ஆவேன். என்னுடைய அனைத்துமே ஜமாஅத்தைச் சார்ந்ததாகும் என்று பதிய வைக்க வேண்டும். அப்போது தான் இந்தக் குழந்தைகள் சரியான வக்ஃபின் சிந்தனையுடன் வேலை செய்வார்கள். அவர்களிடம் எந்தப் பாடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில் மேலிடத்தில் ஜமாஅத்திலிருந்து வழிகாட்டலைப் பெற வேண்டும் என்பதன் பக்கம் கவனம் ஏற்படும்.

நான் கூறியது போன்று, இப்போது ஜமாஅத்தே அஹ்மதிய்யாவில் மட்டுமே தமது குழந்தைகளை ஒரு குறிப்பான உணர்வுடன் அர்ப்பணிக்கின்ற பெற்றோர்கள் உள்ளனர். அவர்கள் ஒரு குறிப்பான உணர்வுடன் தர்பிய்யத் கொடுக்கின்றனர். குழந்தைகள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றக் கூடியவர்களாகவும் வக்ஃபின் ரூஹை நிலைநாட்டக் கூடியவர்களாகவும் ஆக வேண்டும் என்ற உணர்வுடன் தர்பிய்யத் கொடுக்கின்றனர். ஆனால் தமது குழந்தைகளை வக்ஃபே நவ்வில் அனுப்புகின்ற பெற்றோர்களில் பெரும்பாலார் இவ்வாறு தர்பிய்யத்தின் பால் குறிப்பாக கவனம் செலுத்துகிறார்கள் என்று நாம் கூற முடியாது. எனவே தம் குழந்தைகளை வக்ஃபே நவ்வில் அனுப்புகின்ற பெற்றோர்கள் இந்த அன்பளிப்பை ஜமாஅத்திற்கு கொடுப்பதில் தமது உரிமையை எந்த அளவு நிறைவேற்றுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு இந்த அன்பளிப்பை அலங்கரிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு அழகுபடுத்தி ஜமாஅத்திற்கு வழங்குகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்கள் தமது கடமைகளை எந்த அளவுக்கு நிறைவேற்றுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். எல்லாவித சுதந்திரம் இருக்கின்ற இந்நாடுகளில் வாழ்ந்து வரும் நிலையில் மிகவும் அதிகமாக குழந்தைகளை கண்காணிப்பது அவசியமாகும். அதே போன்று ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் ஏழை நாடுகளிலும் குழந்தைகளை வக்ஃப் செய்த பிறகு கவனமற்றவர்களாக இருந்து விடாதீர்கள். மாறாக, தாய் தந்தை ஆகிய இருவரும் குறிப்பாக முயற்சி செய்வது அவர்களின் கடமையாகும்.

12 – 13 வயது அடைந்து விட்ட வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கும் நான் கூறுகிறேன். நீங்கள் உங்களைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்து விடுங்கள். உங்களது முக்கியத்துவத்தைப் பற்றி சிந்தியுங்கள். நீங்கள் வக்ஃபே நவ் ஆவீர்கள் என்று மட்டும் மகிழ்ச்சி அடைந்து விடாதீர்கள். உங்களது குறிக்கோளை நீங்கள் தெரிந்து கொண்டால் தான் உங்களது முக்கியத்துவத்தையும் தெரிந்து கொள்ள முடியும். நீங்கள் எதை அடைய வேண்டும் என்பதன் பக்கம் கவனம் ஏற்படும். 15 வயது அடைந்த பையன்களும் பெண் பிள்ளைகளும் தமது பொறுப்புகளைப் பற்றி மிகவும் அதிகமாக உணர்ந்திருக்க வேண்டும்.

நான் ஓதிய வசனத்தில் பெற்றோர் மட்டுமோ அல்லது ஜமாஅத் அமைப்பின் விருப்பம் மட்டுமோ அல்லது ஒரு சில மக்களின் விருப்பமோ, பொறுப்பு பற்றியோ மட்டும் எடுத்துக் கூறப்படவில்லை.மாறாக குழந்தைகளுக்கும் கவனமூட்டப்பட்டுள்ளது. **ஒவ்வொரு வக்ஃபே நவ் குழந்தையிடமும் உருவாக வேண்டிய முதல் அம்சத்தை இந்த வசனத்தின் ஒளியில் நான் எடுத்துரைக்கிறேன்.**

அக்குழந்தை பிறப்பதற்கு முன்னர் அதன் தாய் ஒரு மாபெரும் குறிக்கோளுக்காக அதை அர்ப்பணிக்க வேண்டும் என்ற விருப்பத்தை தனது உள்ளத்தில் உருவாக்குகிறாள். பிறகு அந்த விருப்பம் நிறைவேற்றுவதற்காக மிகவும் பணிவுடன் துஆவும் செய்தாள். இந்த விருப்பத்தில் தந்தையும் சேர்ந்து கொள்கிறார். எனவே குழந்தைகள் தமது பெற்றோர்களது விருப்பம் மற்றும் துஆவை மதித்தவாறு தம்மை அல்லாஹ்வுக்காக நேர்ந்து விடப்பட்டதற்கான உரிமையை நிறைவேற்ற தகுதி உடையவராக ஆக்கிக் கொள்ள

முயற்சி செய்ய வேண்டும். நமது உள்ளத்தையும், மூளையையும், நமது சொல்லையும் செயலையும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப ஆக்கிக் கொள்ளும் கவனம் இருந்தால் தான் இது நம்மால் முடியும்.

**இரண்டாவது அம்சம்**, உங்கள் மீது உங்கள் பெற்றோரின் மாபெரும் கருணை உள்ளது. இந்த கருணை காட்டியதன் காரணமாக அவர்களுக்காக துஆ செய்வதுடன், அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக! என்று துஆ செய்வதுடன் அவர்கள் புறமிருந்து உங்களுடைய தர்பிய்யத்திற்காக எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடிக்கும் உங்களது உள்ளத்தில் மதிப்பு இருக்க வேண்டும். எனது பெற்றோர்கள் தமது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக முயற்சி செய்கின்றனர். நானும் அதில் அங்கமாக வேண்டும் என்ற சிந்தனை இருக்க வேண்டும். அவர்களுடைய தர்பிய்யத்தை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். பெற்றோர்களின் வாக்குறுதி ஒருபோதும் முறிந்து விடக் கூடாது. மார்க்கத்திற்கு உலகத்தை விட அதிக முன்னுரிமை வழங்குவதற்கான உடன்படிக்கையை எடுக்கும் அதிக உரிமை வக்ஃபே நவ் குழந்தைகளுக்கு இருக்கிறது. எல்லாரையும் விட அதிகமாகவும் எல்லாரையும் விட முதன்மையாகவும் நானே இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவேன் என்ற சிந்தனை வக்ஃபே நவ் குழந்தைகளுக்கு இருக்க வேண்டும்.

**மூன்றாவதாக**, இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக எல்லா தியாகங்களும் செய்து பொறுமை மற்றும் உறுதிப்பாட்டை காட்டுவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு தான் கடினமான சூழ்நிலை வந்தாலும் நான் எல்லா நிலையிலும் எனது வக்ஃபிற்கான வாக்குறுதியை நிறைவேற்றுவேன். எந்தவித உலக இச்சையும் எனது வக்ஃபிற்கான வாக்குறுதியில் தடுமாற்றத்தை ஏற்படுத்தாது.

இப்போது அல்லாஹ் ஜமாஅத்தின் மீது மிகவும் அதிகமாக கருணையும் அருளும் புரிந்து கொண்டிருக்கிறான். இரண்டாவது கிலாஃபத்தின் காலத்தில் சில வருடங்களில் மிக அதிகமான பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டன. இதனால் ஜமாஅத்தின் பல ஊழியர்களுக்கு அவர்களின் அடிப்படை சம்பளத்தைக் கூட கொடுக்க முடியாமல் போனது. அவ்வாறே தொடக்கத்தில் ஹிஜ்ரத்திற்குப் பிறகு ரப்வாவிலும் இவ்வாறான நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் இந்த எல்லா சூழ்நிலையிலும் அக்காலகட்டத்தில் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த நபர்கள், ஒருபோதும் நாவினால் புகார் கூறியது கிடையாது. தமது பணிகளில் பின்தங்கியது கிடையாது. இது பழைய காலத்து சம்பவமாகும். 1970-80 களில் ஆப்பிரிக்காவிலும் சில நாடுகளில் இவ்வாறான சூழ்நிலை இருந்தது. அங்கு பணிபுரிந்தவர்கள் மிகவும் கஷ்டத்தை அனுபவித்துள்ளார்கள். ஜமாஅத் கொடுக்கிற சம்பளம் அதிகபட்சமாக 15-20 நாட்களில் முடிந்து விடும். உள்ளூரின் வாகிஃபீன்கள் ஒரு நேரம் மட்டும் மிகவும் சிரமப்பட்டு சாப்பிட்டு வந்தனர். ஆனால் அவர்கள் தமது வக்ஃபிற்குரிய வாக்குறுதியை எப்போதும் நிறைவேற்றியே வந்துள்ளனர். தப்லீகின் பணிகளில் ஒருபோதும் தடைபட்டது கிடையாது.

**நான்காவது அம்சம்**, நீங்கள் உங்களை நன்மையை ஏவி தீமையிலிருந்து தடுப்பவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சிந்தனையை உயர்த்த வேண்டும். மேலும் அதற்காக முயற்சி செய்ய வேண்டும். உங்களது நல்லொழுக்கத்தின் உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். இவ்வாறு நல்லொழுக்கத்தின் உயர்ந்த முன்மாதிரி நிலைநாட்டப்பட்டால் நன்மைகள் தாமாகவே நடைபெற்று வரும். தீமைகளை விட்டு நீங்கள் உங்களை தடுப்பவர்களாகவும் திகழ்வீர்கள். இவ்வாறான முன்மாதிரியின் பக்கம் மக்களது கவனம் தானாகவே ஈர்க்கப்படும். மக்களுடைய பார்வை உங்கள் மீது படும் போது உங்களுக்கு இன்னும் அதிகமாக வாய்ப்புகள் கிடைக்கும். எனவே உங்களிடம் இந்த உணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். இத்துடன் முயற்சியும் இருக்க வேண்டும்.

**ஐந்தாவது அம்சம்**, நன்மைகள் மற்றும் தீமைகளைப் பிரித்தறிவதற்காக திருக்குர்ஆனையும் ஹதீஸையும் புரிகின்ற திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களையும் பிரசுரங்களையும் வாசிக்க வேண்டும். உங்களது மார்க்க அறிவை வளர்த்துக் கொள்வதற்காக எந்நேரமும் முயற்சி செய்து வருதல் வேண்டும். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயில்கின்ற

பையனுக்கு மார்க்க அறிவு கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அங்கிருந்து தேர்ச்சி பெற்ற பிறகு எனது அறிவு முழுமையாக வளர்ந்து விட்டது என்று நினைத்து விடக் கூடாது. மாறாக அறிவை எப்போதும் வளர்த்து வர முயற்சி செய்ய வேண்டும். மார்க்கத்தில் ஆழமாக சிந்திப்பது புதிதாக அறிவு பெறும் போது தான் பலன் தருகிறது. அதற்கு புதிதாக தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். (அப்போது தான் அது பசுமையாக இருக்கும்.)

ஜாமிஆவில் பயிலாத மாணவர்களும் தொடர்ச்சியாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். உலகக் கல்வி பயின்று வருகின்ற வக்ஃபே நவ் குழந்தைகள் மார்க்கக் கல்வியைக் கற்க வேண்டியதன் அவசியம் இல்லை என்பது கிடையாது. நம்மிடம் இருக்கின்ற நூல்களை வாசிக்க வேண்டும். திருக்குர்ஆனின் மொழியாக்கம் மற்றும் அதன் விளக்கவுரைகளைப் படிக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதை வாசிக்க வேண்டும்.

**அல்லாஹ் கட்டளையிட்டுள்ள ஆறாவது அம்சம்,** செயல்பூர்வமாக தப்லீக் களத்தில் இறங்குவதாகும். இதன் பக்கம் வக்ஃபே நவ்வில் சேர்ந்தவர்கள் கவனம் செலுத்த வேண்டும். சில வாக்கிஃபாத்தே நவ் (அதாவது வக்ஃபே நவ்வில் உள்ள பெண்கள்) எங்களுக்காக ஜாமிஆ இல்லையே! என்று புகார் கூறுகின்றனர். அதாவது மார்க்கக் கல்வி பயில முடியவில்லை என்கின்றனர். நான் முதலில் கூறியதற்கிணங்க நீங்கள் உங்கள் வட்டத்திற்குள் படிக்க வேண்டும். உங்கள் வட்டத்திற்குள் நீங்கள் தப்லீகின் பக்கம் கவனம் செலுத்துங்கள். சந்தர்ப்பங்கள் கிடைக்கும். இவ்வாறு தப்லீகின் பக்கம் கவனம் ஏற்படும்போது, சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது இன்னும் அதிகமாக நூல்களை வாசிப்பதன் பக்கம் கவனம் ஏற்படும். இவ்வாறு மார்க்க அறிவை வளர்ப்பதற்கு தாமாகவே கவனம் ஏற்பட்டுக் கொண்டே செல்லும். எனவே தப்லீகிற்கான மைதானம் எல்லாருக்கும் திறந்தே இருக்கிறது. இதில் வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்கள் களமிறங்குவது அவசியமாகும். இதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு பங்கெடுக்க வேண்டும்.

உலகம் ரஸூல் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் வராத வரை நான் ஓயமாட்டேன் என்று உறுதிகொள்ள வேண்டும். இந்த உணர்வும் எழுச்சியுமே மார்க்க அறிவை பெருக்கிக் கொள்வதன் பக்கம் நம்மை கவனம் உள்ளவர்களாக வைத்திருக்கும். இதனால் தப்லீகின் பக்கம் கவனம் ஏற்படும்.

**வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஏழாவது அம்சம்**, அவர்கள் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றும் பிரிவைச் சேர்ந்தவர்களாவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உங்களிடம் மார்க்க அறிவு இருக்கிறது. உங்களுக்கு சந்தர்ப்பங்களும் கிடைக்கின்றன. ஆனால் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற உண்மையான ஆர்வம் இல்லை என்றால் மனித குலத்தை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற வேதனை உள்ளத்தில் இல்லையென்றால், எந்த அளவுக்கு வேதனையுடன் கூடிய முயற்சி செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்ய முடியாது. மேலும் அதில் பரக்கத்தும் இல்லாமல் போய் விடலாம்.

எனவே அல்லாஹ்வின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதற்காக வேதனையுடைய ஒவ்வொரு உள்ளமும் தனது முயற்சியுடன் துஆவின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். வேதனையில் எழுகின்ற துஆ நமது குறிக்கோளில் நம்மை வெற்றி பெறச் செய்யும். எனவே ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். நமது துஆக்களின் வட்டம் நம்முடன் மட்டும் குறுகியதாக இருக்கக் கூடாது. மாறாக, அதன் அலைகள் எல்லா பக்கமும் வீசக் கூடியதாக தென்பட வேண்டும். இதனால் இறைவன் இன்று நமக்கு வழங்கிய அருளிலிருந்து யாரும் பேரிழந்தவர்களாக இருக்கக் கூடாது. உண்மையான உணர்வு மற்றும் அனுதாபம் ஆகியவற்றால் நிறைந்த துஆக்கள் இன்றி நமது குறிக்கோளை நாம் அடைய முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு உண்மையான வக்ஃபே நவ் மற்றும் வாக்கிஃபே ஸிந்தகியிடம் இந்த சிந்தனை தான் இருக்க வேண்டும். இது இல்லாமல் வெற்றிக்கான எதிர்பார்ப்பு வெறும் கற்பனையாகும். இவை இல்லாமல் வக்ஃபே நவ் அல்லது வாக்கிஃபே ஸிந்தகி என்பது வெறும் Title மட்டுமே ஆகும். இதை தவிர

இதற்கு எந்த மதிப்பும் இல்லை. வெறும் Title ஐ மட்டும் பெறுவது நமது குறிக்கோள் அல்ல. தமது குழந்தைகளை இந்த தியாகத்திற்காக அர்ப்பணித்த பெற்றோர்களின் குறிக்கோளும் இது அல்ல.

ஏற்கனவே நான் கூறியதற்கேற்ப பெற்றோர்களும் வாக்கிஃபீன்களும் தமது பொறுப்பை நிறைவேற்றுவது அவசியமாகும். நான் மீண்டும் இதன் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். உலகில் மார்க்கத்தை பரப்புவதற்காக மார்க்க அறிவைப் பெறுவது அவசியமாகும். இந்த அறிவு, மார்க்க் கல்வியை கற்பிப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள துறைகளின் வாயிலாகவே கிடைக்க முடியும். இது ஜமாஅத்தே அஹ்மதிய்யாவில் ஜாமிஆ அஹ்மதியா என்று அழைக்கப்படுகிறது. இன்று அல்லாஹ்வின் அருளால் இந்த ஜாமிஆக்கள் பாகிஸ்தான் அல்லது இந்தியாவில் மட்டும் இருக்கும் ஒன்றல்ல. மாறாக U.K. –விலும் உள்ளது. நான் முன்னதாக வாசித்த புள்ளி விபரத்தில் இந்த பட்டியல் உள்ளது. கனடாவிலும் உள்ளது. கானாவிலும் உள்ளது. நான் ஏற்கனவே கூறியது போன்று கானாவில் சாஹித் படிப்புக்காக புதிய ஜாமிஆ ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்பு அங்கு ஜாமிஆ இருந்தது. ஆனால் அங்கு முஅல்லிம்கள் மட்டும் படித்து வெளி வந்தனர். மூன்று வருட கோர்ஸ் மட்டும் இருந்தது. இப்போது கானாவில் திறக்கப்பட்டுள்ள ஜாமிஆ, சாஹித் படித்த முபல்லிக்குகளை தயார் செய்யும். தற்போது முழு ஆப்பிரிக்க ஜமாஅத்துகளுக்காக மட்டும் இந்த முபல்லிக்குகள் தயார் ஆவார்கள். இவ்வாறு வங்காளதேசத்திலும் ஜாமிஆ அஹ்மதிய்யா உள்ளது. தப்லீகின் பணிகள் மிகவும் விசாலமானவையாகும். இது முறைப்படி தர்பிய்யத் பெற்ற முபல்லிக்குகளால் மட்டுமே சிறந்த முறையில் நடைபெற முடியும். எனவே வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்களில் அதிக எண்ணிக்கை ஜாமிஆ அஹ்மதியாவுக்கு வர வேண்டும்.

நான் எடுத்துக் கூறிய புள்ளி விபரத்தின் படி பார்க்கும் போது வருங்காலத்தில் இன்னும் சிறிது காலத்துக்கென்ன? இன்னும் பல வருடங்களுக்குக் கூட எல்லா ஜமாஅத்துகளுக்கும் முபல்லிக்குகளை நியமிக்க முடியாத சூழ்நிலை உள்ளது என்று தெரிகிறது. முழு நேரத்தை அர்ப்பணிக்கும் முபல்லிக்குகள் மற்றும் முஅல்லிம்கள் இல்லாத வரை புரட்சிகரமான மாற்றம் மற்றும் புரட்சிகரமான தப்லீக் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுவது மிகவும் கடினமான ஒன்றாகும்.

இப்போது உலகம் முழுவதிலிருந்தும் வக்ஃபே நவ் துறைக்கு அறிக்கை கிடைத்துள்து. இது 2012 ஜுலை மாதம் வரையுள்ள அறிக்கை ஆகும். இதன்படி 15 வயதிற்கு மேற்பட்ட வக்ஃபே நவ் ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை 25000 ஆகும். ஆண்கள் 16,988 ஆவர். இவர்களில் பாகிஸ்தானின் வக்ஃபே நவ் 10,687 ஆகும். பாகிஸ்தானுக்குப் பிறகு ஜெர்மனியில் அதிக எண்ணிக்கை உள்ளனர். 1,887 ஆண்களும் 1,155 பெண்களும் உள்ளனர். பிறகு இங்கிலாந்து 918 ஆண்கள் மொத்தம் 1,758 பேர் உள்ளனர். மீதம் 800க்கு சற்று அதிகமாக பெண்கள் உள்ளனர். ஆனால் ஜாமிஆ அஹ்மதிய்யாவுக்கு வரக்கூடியவர்களின் எண்ணிக்கை ஜெர்மனியிலும் U.K. –விலும் மிகக் குறைவாகவே உள்ளனர்.

இவ்விரண்டு ஜாமிஆக்களிலும் ஐரோப்பாவின் பிற நாடுகளில் இருந்தும் மாணவர்கள் படிக்கின்றனர். இவ்வாறு இந்த எண்ணிக்கை இன்னும் குறைந்து விடுகிறது. அவ்வாறே அமெரிக்கா மற்றும் கனடாவின் ஜாமிஆவிலும் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. ஜமாஅத்துகள் முபல்லிக் மற்றும் முரப்பிகள் தங்களுக்கு வேண்டும் என்று கேட்கின்றன. எனவே **நீங்கள் வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்களை ஜாமிஆவில் கல்வி பயில்வதற்காக ஆயத்தப்படுத்துங்கள்**. கனடா மற்றும் அமெரிக்காவில் இப்போது 15 வயதிற்கும் மேற்பட்ட வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்கள் ஏறக்குறைய 800 பேர் உள்ளனர். இவர்களை தயார் செய்தால் அடுத்த இரண்டு வருடங்களில் ஜாமிஆவில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையை கணிசமாக உயர்த்த முடியும்.

முரப்பி அல்லது முபல்லிக்காக மட்டுமல்ல. மாறாக ஜாமிஆவில் பயின்று மார்க்க அறிவைப் பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களை மொழிபெயர்ப்பதற்காகவும் இவர்களை உருவாக்கலாம். ஜாமிஆவில் பயின்ற பிறகு இவர்களுக்கு பல்வேறு மொழியில் சிறப்புப் படிப்பும் கற்பிக்கலாம். ஜாமிஆவிற்கு வராதவர்களும் மொழிகளை கற்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஹஸ்ரத்

நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள். மொழிகளைக் கற்பவர்களுக்கு மூன்று மொழிகள் தெரிந்திருக்க வேண்டும். ஒன்று அவர்களது தாய்மொழி. இரண்டாவது உருது, மூன்றாவது அரபி மொழி.

திருக்குர்ஆன் ஓதுவதற்காகவும் அதன் விளக்கவுரைகளைக் கற்பதற்காகவும் அரபி மொழி கற்பது அவசியமாகும். இன்னும் பல நூல்கள் உள்ளன. மொழியாக்கம் செய்யும் போது அரபி மொழி தெரியாத வரை திருக்குர்ஆனையும் சரியாக மொழிபெயர்க்க முடியாது. உர்து மொழியை கற்பதன் முக்கியத்துவமும் இருக்கிறது. இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களில் இருந்துதான் மார்க்க அறிவைப் பெற முடியும். ஏனென்றால் அவர்களின் விளக்கவுரை அவர்களின் நூல்கள் ஆகியவை மட்டுமே ஒரு களஞ்சியமாகும். இதுவே உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடியும். இதுவே இஸ்லாத்தின் சரியான போதனையை உலகிற்கு கொடுக்க முடியும். இதுவே திருக்குர்ஆனின் சரியான மற்றும் உண்மையான போதனையை உலகிற்கு கற்பிக்க முடியும்.

எனவே உர்து மொழியைக் கற்றுக் கொள்ளாமல் சரியான முறையில் மொழிகளில் புலமையைப் பெற முடியாது. ஒரு காலம் இருந்தது. அப்போது மொழிபெயர்ப்புப் பணிகளை செய்வதில் ஜமாஅத்தில் சிரமம் இருந்தது. இந்த சிரமம் இப்போதும் இருக்கிறது. ஆனால் ஓரளவு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஜாமிஆவின் மாணவர்களின் காரணமாக இந்த சிரமம் குறைந்துள்ளது. இதன் பக்கம் கவனம் ஏற்பட்டுள்ளது. ஜாமிஆவின் ஆய்வுக் கட்டுரைகளில் (Project) உர்து மொழிபெயர்ப்புப் பணிகள் செய்யப்படுகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களும் மொழிபெயர்க்கப்படுகின்றன. மாணவர்களின் கண்காணிப்பாளர்கள் கூறுவதன் படி சிறந்த பணிகள் நடைபெறுகின்றன.

எவ்வாறு இருந்தாலும் தரம் மிகவும் உயர்வாக இல்லா விட்டாலும் இதை இன்னும் மெருகூட்டலாம். எப்படி இருந்தாலும் முயற்சி தொடங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மாணவர்கள் ஒரு சிலர் தான் உள்ளனர். இவர்களுக்கு 2-4 நூல்கள் தான் கொடுக்கப்படுகிறது. **நமக்கு மொழிப்புலமை பெற்றவர்கள் அதிகமான எண்ணிக்கையில் தேவை. இதன் பக்கம் வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.** ஜாமிஆ மாணவர்களைத் தவிர பிற மாணவர்கள் மொழிகளில் புலமை பெறுகிறார்கள் என்றால், நான் முன்னதாக கூறியபடி அவர்கள் உர்து மற்றும் அரபி மொழி பயில வேண்டும். இதை செய்யாமல் மொழியின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய நோக்கம் நிறைவேறாது.

சிலர் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மீது அதாவது ஜெர்மனி மற்றும் சில இடங்களில் கல்வித்தரம் சரியில்லை என்று ஆட்சேபனை செய்கின்றனர். இது முற்றிலும் வீணான ஆட்சேபனையாகும். ஆட்சேபனை செய்பவர்களின் கருத்து என்னவென்றால், ஜாமிஆவில் இருந்து படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அரபி பேச தெரியவில்லை என்பதாகும். அல்லது அவர்களது பேச்சுத்திறன் அவ்வளவு சரியாக இல்லை என்று கூறுகின்றனர்.

மொழிப் புலமையைப் பொருத்த வரை ஜாமிஆ அஹ்மதிய்யாவில் பல்வேறு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. மொழிகள் மட்டும் கற்பிக்கப்படுவதில்லை. பிற பல்கலைக்கழகங்களில் அல்லது பிற மத்ரஸாக்களில் கற்பிக்கப்படுகிறது என்றாலும் ஒரு குறிப்பிட்ட பாடம் கற்பித்து அதில் சிறப்பான கவனம் செலுத்தப்படுகிறது. இங்கு பல்வேறு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட மொழியின் பக்கம் அதிக கவனம் இருக்கிறது அல்லது மொழியைக் கற்பதன் பக்கம் அதிக கவனம் இருக்கிறது என்று தெரிந்தால் அவரை அந்த மொழியில் Specialisation செய்ய வைக்கலாம். பிறகு அவர்களின் பேச்சுத்திறன் சரியில்லை என்ற புகாரும் விலகி விடும்.

ஆனால் கல்வித்தரம் என்ற அடிப்படையில் அவர்களுக்கு கற்பிக்கப்படுகின்ற பாடத்திட்டம் மிகவும் விசாலமானதாகும். அல்லாஹ்வின் அருளால் மாணவர்கள் அதை படிக்கின்றனர். பாகிஸ்தானில் ஜாமிஆ மிகவும் பழமையானதும் அனுபவமிக்கதுமாகும். அங்கு மொழிப்புலமை பெறுவதற்கு படிக்க வைக்கப்படுகின்றனர். குறிப்பாக ஜெர்மனியிலிருந்து எனக்கு தகவல் கிடைத்தது. இவ்வாறு ஆட்சேபனை

செய்வது தமது குழந்தைகளை ஜாமிஆவிற்கு அனுப்பாமல் இருப்பதற்கான சாக்குப் போக்காகும். அல்லாஹ்வின் அருளால் U.K. மற்றும் கனடாவிலிருந்து வெளிவந்த மாணவர்கள் தப்லீக் மைதானத்தில் இதுவரை அவர்களுக்கு கிடைத்த அனுபவத்தை வைத்து பார்க்கும் போது அல்லாஹ்வின் அருளால் அவர்கள் நல்ல விளைவைத் தருகின்றனர். நான் ஏற்கனவே கூறியதன்படி இந்த அறிவு அத்துடன் வளர்ந்து கொண்டே செல்லும். எனவே இவ்வாறு ஆட்சேபனை செய்பவர்கள் சில மாணவர்கள் ஜாமிஆவில் வந்து படிப்பதை விட்டும் வழிகெடுக்கின்றனர். இவர்கள் குழப்பவாதிகள் ஆவர். அல்லது இவர்களிடம் நயவஞ்சகத் தன்மை உள்ளது. எனவே அவர்கள் பாவமன்னிப்புக் கோர வேண்டும்.

வக்ஃபே நவ்வின் சில துறைகள் அமைப்பு ரீதியாகவும் சிலவற்றை கவனமூட்டியுள்ளார்கள். அதை நான் எடுத்துக் கூறுகிறேன். சிலவற்றின் பக்கம் ஏற்கனவே கவனமூட்டப்பட்டிருக்கலாம். வக்ஃபே நவ்வில் பெற்றோர்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே இந்த வகையில் தர்பிய்யத் கொடுப்பதில்லை. நான் ஏற்கனவே கூறியுள்ளேன். குழந்தைகள் பெரியவர்களானதும் அவர்கள் தாமாகவே முன் வந்து தம்மை ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதற்காக முன் வைக்க வேண்டும் என்பது அக்குழந்தைகளுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். இவ்வகையில் தர்பிய்யத் வழங்க வேண்டும். இதுபற்றி நான் ஏற்கனவே கூறியுள்ளேன்.

அவர்களது கல்வியின் ஒவ்வொரு நிலையிலும் அவர்களுக்கு கவனமூட்டுங்கள். பிறகு வக்ஃபே நவ்வின் துறையிடமிருந்து வழிகாட்டலைப் பெற்று வாருங்கள். அவர்களுடைய கல்வியின் நிலைகளில் அக்குழந்தை இப்போது நான் இந்த நிலையை அடைந்து விட்டேன். இனி என்ன செய்ய வேண்டும்? என்று அக்குழந்தை கேட்க வேண்டும். தன் விருப்பத்தை மட்டும் நிறைவேற்ற வேண்டுமென்றால் அல்லது ஜமாஅத்திற்குத் தேவையில்லாத துறையை தேர்வு செய்ய விரும்பினால் வக்ஃபை விட்டு விலகி விடுங்கள்.

வாக்கிஃபாத்தே நவ் பெண்கள், பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்துள்ளனர். அவர்களுக்கு உர்து பேசத் தெரியும். அவர்கள் உர்து வாசிக்கவும் கற்க வேண்டும். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் உள்ளூர் மொழியையும் படிக்க வேண்டும். ஆங்கிலம் அல்லது ஜெர்மன் மொழியைப் பயில வேண்டும். சில நாடுகளில் ஆங்கிலம் அரசாங்க மொழியாக உள்ளது. ஆனால் உள்ளூர் மொழி வேறு ஒன்றாகும். அதையும் கற்க வேண்டும். அரபி மொழியைக் கற்க வேண்டும். அதன் பிறகு நீங்கள் மொழிபெயர்ப்புப் பணிகளைச் செய்வதற்காக முன் வாருங்கள். பெண்களிடம் மொழியைக் கற்கும் திறன் அதிகமாக உள்ளதை நான் பார்த்துள்ளேன். எனவே இந்த பணிக்காக அவர்கள் முன்வரலாம். பிறகு டாக்டர், ஆசிரியர் படித்து பெண்கள் வக்ஃப் செய்ய முன்வரலாம். ஆண்களும் முன் வர வேண்டும். வக்ஃபே நவ் துறைக்கு இதைப் பற்றிய ஒவ்வொரு நிலையும் தெரிந்திருக்க வேண்டும். ஆண்கள் மற்றும் பெண்களின் தர்பிய்யத்திற்காக வருடத்தில் இரண்டு முறை Forum நடத்த வேண்டும். அதில் அவர்களது பணிகள் மற்றும் கல்வி தொடர்பான வழிகாட்டுதல் இருக்க வேண்டும்.

இந்தத் துறையின் ஒரு புகார் என்னவென்றால், சில பெற்றோர்கள் தமது குழந்தைகளை வக்ஃப் செய்கின்றனர். பின்பு வக்ஃபே நவ் Reference Number கிடைத்தவுடன் உள்ளூர் ஜமாஅத் மற்றும் மேலிடம் ஆகிய இரண்டிலிருந்து ஏறக்குறைய தொடர்பை முற்றிலும் விட்டு விடுகின்றனர். அல்லது எந்த அளவுக்கு தொடர்புடன் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அவர்கள் தொடர்புக்குள் இருப்பதில்லை. பிறகு ஒரு நிலையை அடைந்ததும் வக்ஃபே நவ் பிரிவு இவர்களுடன் 8-10 வருடங்களாக எந்தத் தொடர்பும் இல்லை. ஆதலால் இவர்களை நீக்கி விட வேணடும் என்று கூறினால், இவர்களுக்கு புகார் எழுகிறது. எனவே Reference Number கிடைத்துவிட்டது என்றால் அத்துடன் எல்லாக் கடமைகளும் முடிந்து விடுவதில்லை. தொடர்ச்சியாக அலுவலகத்துடனும், தேசிய வக்ஃபே நவ் பிரிவுடனும், மேலிடத்துடனும் தொடர்பில் இருப்பது அவசியமாகும்.

வக்ஃபே நவ்வைச் சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதையும் படிக்க வேண்டும். இதில் தேர்வுகள் நடத்தப்பட்டால் அதில் முழுமையாகக் கலந்து கொள்ள வேண்டும். இந்த வயதிற்கு மேலுள்ள ஆண்களும் பெண்களும் திருக்குர்ஆனின்

விளக்கவுரையைப் படிக்க வேண்டும். உர்து தெரிந்தவர்கள் உர்துவிலும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஆங்கிலத்தில் Five Volumes (ஐந்து பாகங்கள்) உள்ளது. அதனைப் படிக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் நூல்கள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. யாருக்கு எந்த மொழி தெரியுமோ அவர் அந்த மொழியில் அதை வாசிக்க வேண்டும். குத்பாக்களையும் சொற்பொழிவுகளையும் முறைப்படி தொடர்ந்து கேட்க வேண்டும். உங்களுடைய அறிவைப் பெருக்கிக் கொண்டே செல்லுங்கள். இது வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கு மிகவும் அவசியமாகும். அதன் பிறகு அதன் அறிக்கையையும் அனுப்புங்கள்.

வக்ஃபே நவ் செயலர்கள் சில இடங்களில் சுறுசுறுப்பாக இல்லை. இவர்கள் வெறுமனே பொறுப்பை வகித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். இவ்வாண்டு தேர்தல் நடைபெறுகிறது. ஜமாஅத்துகளிலிருந்து எனக்கு வக்ஃபே நவ் செயலர்கள் யாரெல்லாம் சுறுசுறுப்பாக இல்லை என்று அறிக்கை அனுப்ப வேண்டும். சிறப்பாக பணி செய்யாதவர்களுக்கு ஓட்டுகள் அதிகமாக கிடைத்திருந்தாலும் அவர்கள் இம்முறை நியமிக்கப்படமாட்டார்கள்.

பாடத்திட்டத்தைப் பற்றி முதலில் கூறினேன். ஜமாஅத்திற்கும் ஒரு பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தனித்தனியாக பாடத்திட்டம் ஏற்பாடு செய்ய முடியாத இடங்களில் ஜமாஅத்தின் பாடத்திட்டத்திலேயே வக்ஃபே நவ்வில் உள்ளவர்களும் சேர்ந்து கொள்ளலாம். இவ்விரண்டு பாடத்திட்டத்திற்கும் கொஞ்சம் தான் வித்தியாசம் உள்ளது. அவ்விரண்டும் பரஸ்பரம் ஒத்திருக்கக்கூடிய பகுதிகளை அத்ஃபால்களின் பாடத்திட்டத்தை அத்ஃபால் வக்ஃபே நவ் சிறுவர்கள் படிக்கலாம். குத்தாம்களின் வயதை அடைந்தவர்கள் குத்தாம்களின் பாடத்திட்டத்தைப் படிக்கலாம். லஜ்னாக்களும் லஜ்னாவின் பாடத்திட்டத்தை படிக்கலாம் அல்லது இந்த பாடத்திட்டத்தை ஒன்றாக இணைக்கவும் செய்யலாம். ஜமாஅத் அமைப்பின் கீழ் தர்பிய்யத் செயலர், தஃலீம் செயலர், வக்ஃபே நவ் செயலர் ஆகியவர்கள் அனைவரும் ஜமாஅத்தின் துறையின் கீழ் செயல்படுகிறார்கள். அமீர்களும், தலைவர்களும் இவர்களை ஒன்றுகூட்டி செயல்திட்டக் வழிமுறையை உருவாக்க வேண்டும். இந்த பாடத்திட்டத்தை எந்த நிலையிலும் கண்டிப்பாக படிக்க வேண்டும். குறிப்பாக வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்களை இதில் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

வக்ஃபே நவ்வின் பாடத்திட்டத்தை பல்வேறு நாடுகள் தத்தமது தாய்மொழியில் மொழிபெயர்த்து வெளியிடலாம். சுவீடன் தனது மொழியில் இதை வெளியிட்டுள்ளது. பிரெஞ்சு மொழியில் வெளியிடுவதற்கு பிரான்ஸ அல்லது மொரீஷியஸ் முயற்சி செய்ய வேண்டும். இந்த முயற்சிகள் யாவும் வெறும் நாவளவில் மட்டும் இருக்கக் கூடாது. மாறாக இரண்டு மாதங்களுக்குள் யார் இதை தர்ஜுமா செய்ய முடியும்? என்று உடனடியாக எனக்கு தகவல் கொடுங்கள். அத்துடன் இரண்டு மாதங்களுக்குள் இந்த மொழிபெயர்ப்பு முழுமை அடைந்து விட வேண்டும்.

வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்கள் தினமும் ஏதாவதொரு மார்க்க நூலை வாசிக்க வேண்டும். தினமும் ஓரிரு பக்கங்கள் வாசித்தாலும் சரியே. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் நூல்களை வாசிப்பது மிகச் சிறந்ததாகும். 100% வக்ஃபே நவ் ஆண்களும் பெண்களும் குத்பாக்களை முழுமையாகக் கேட்க வேண்டும். இதற்காக முயற்சி செய்யுங்கள். U.K. –வில் நான் ஒருமுறை இதை கணக்கெடுத்தேன். 10% பேர் தான் முறையாக குத்பாவைக் கேட்கிறார்கள் என்பது எனக்கு தெரிய வந்தது. இதன் பக்கம் வக்ஃபே நவ் பிரிவும், பெற்றோர்களும் மற்றும் வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

வாக்கிஃபீனே நவ்விற்கான நிகழ்ச்சிகளை அமைப்பவர்களும் உரையாடல் வடிவிலான நிகழ்ச்சிகளை உருவாக்க வேண்டும். இதனால் அதிக கவனம் ஏற்படுகிறது. இவ்வாறே ஒவ்வொரு நாட்டின் பொறுப்பாளர்களும் ஒரு கமிட்டி அமைக்க வேண்டும். அவர்கள் அடுத்த மூன்று மாதங்களுக்குள், தமது நாட்டின் அடுத்த 10 ஆண்டுகால தேவை என்ன? என்பதை ஆய்வு செய்ய வேண்டும். எத்தனை முபல்லிக்குகள் தேவை? எத்தனை மொழிகளில் மொழிபெயர்ப்பாளர்கள் தேவை? எத்தனை டாக்டர்கள் தேவை? எத்தனை

ஆசிரியர்கள் தேவை? எங்கெல்லாம் தேவை? இவ்வாறு பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுனர்கள் தேவை என்றால் அது என்ன? உள்ளூர் மொழிகளில் புலமை பெற்றவர்கள் எத்தனை வேண்டும்? 3 முதல் 4 மாதங்களுக்குள் தெரிவிக்கவும். இதை வக்ஃபே நவ் பிரிவு முறையாக கண்காணிக்க வேண்டும்.

சிலர் வியாபாரத்தில் செல்ல விரும்புகின்றனர். சிலர் போலீஸிலும் அல்லது சிலர் இராணுவத்திலும் மற்றும் பிற துறைகளிலும் செல்ல விரும்புகின்றனர். சரி நீங்கள் போகலாம். ஆனால் வக்ஃபிலிருந்து விலகி விடுங்கள். முறைப்படி தகவல் தாருங்கள். இவ்வாறே ஒவ்வொரு நாட்டிலும் வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்களுக்காக Career Guidance Committee இருக்க வேண்டும். இது பல்வேறு துறைகளுக்கு செல்லக் கூடியவர்கள் தொடர்பாக அறிக்கையை மேலிடத்திற்கு அனுப்ப வேண்டும். அல்லது பல்வேறு துறைகளில் யாருக்கெல்லாம் ஆர்வம் இருக்கிறது என்பது தொடர்பாக மேலிடத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். பிறகு இதற்கு எப்படி அனுமதி வழங்க வேண்டும் என்று மேலிடம் முடிவு செய்ய வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியுள்ளேன். 18 வயதை அடைகின்ற வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்கள் தமது வக்ஃபே நவ் உடன்படிக்கையை புதுப்பிப்பதை மறக்க வேண்டாம். ஒப்பந்தப் பத்திரத்தை எழுதி அனுப்புங்கள். இவ்வாறே வக்ஃபே நவ் ஆண்களுக்காக இஸ்மாயீல் பத்திரிகையும் பெண்களுக்காக மர்யம் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட வேண்டும். உள்ளூரைச் சேர்ந்த வக்ஃபே நவ் ஆண்களோ அல்லது பெண்களோ அதில் கட்டுரை எழுதினால் அதை வெளியிடுங்கள். இல்லையென்றால் அந்தப் பத்திரிகைகளுக்கு இங்கிருந்து கட்டுரைகள் கிடைக்கும். அதையும் அவர்கள் தத்தமது மொழிகளில் உர்துவுடன் சேர்த்து வெளியிடலாம்.

தமது குழந்தைகளை வக்ஃபே நவ்விற்காக அர்ப்பணித்த பெற்றோர்கள் உண்மையில் அவர்களை வக்ஃபே நவ்வைச் சேர்ந்தவர்களாக ஆவதற்கு தகுதி உடையவர்களாகத் திகழும் அளவிற்கு சிறந்த தர்பிய்யத் மற்றும் துஆ செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக! இந்த குழந்தைகள் அவர்களது பெற்றோரின் கண்களுக்கு குளிர்ச்சியாக விளங்குவார்களாக! குழந்தைகள் தமது பெற்றோர்களின் வாக்குறுதியையும் தமது வாக்குறுதியையும் நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் இவர்களுக்கு இதற்கான நல்வாய்ப்பை நல்குவானாக! மார்க்கத்தைப் பரப்புவதை மட்டுமே பணியாகக் கொண்டுள்ள கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இவர்கள் இருப்பார்களாக! அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நல்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on **18.01.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456